தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு : 94436 99066

dinakani2023@gmail.com
www.dhinakani.com

நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்

KANI GYM
CALL:9894808044

மலர் : 02 | இதழ் :208 | 4 - பக்கம் | 24.02.2025 | திங்கள்க்கிழமை | விலை ரூ.6




தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயாது அடிஉறைந் தற்று.

விளக்கம்:
ஒருவருடைய நிழல் அவருடனேயே ஒன்றியிருப்பதைப்போல், தீய செயல்களில் ஈடுபடுகிறவர்களை விட்டுத் தீமையும் விலகாமல், தொடர்ந்து ஒட்டிக் கொண்டிருக்கும்.

## அந்நிய சக்திகளுடன் சேர்ந்து நாட்டை பலவீனப்படுத்த முயற்சி: பிரதமர் நரேந்திர மோடி குற்றச்சாட்டு



புதுடெல்லி: சில அரசியல் தலைவர்கள் அந்நிய சக்திகளோடு கைகோத்து நாட்டை பலவீனப்படுத்த முயற்சி செய்கின்றனர். இந்து மதத்தையும் மகா கும்பமேளா உள்ளிட்ட இந்து பண்டிகைகளையும் விமர்சிக்கின்றனர். சமுதாயத்தில் பிரிவினையை தூண்ட முயற்சி செய்கின்றனர் என்று பிரதமர் நரேந்திர மோடி குற்றம் சாட்டி உள்ளார். மத்திய பிரதேசத்தின் சத்தர்பூர் மாவட்டம், கர்ஹா கிராமத்தில் பாகேஷ்வர் தாம் அமைந்துள்ளது. இந்த கோயில் அறக்கட்டளை சார்பில் கர்ஹாவில் ரூ.218 கோடி செலவில் 25 ஏக்கர் பரப்பளவில் புற்றுநோய் மருத்துவமனை கட்டப்படுகிறது. இதற்கு பிரதமர் நரேந்திர மோடி நேற்று அடிக்கல் நாட்டினார். அப்போது அவர் பேசியதாவது: சில அரசியல் தலைவர்கள் இந்து மதத்தை விமர்சித்து வருகின்றனர். மகா கும்பமேளா உள்ளிட்ட இந்து மத பண்டிகைகள் குறித்தும் இந்து பாரம்பரியங்கள் குறித்தும் எதிர்மறையான கருத்துகளை வெளியிட்டு வருகின்றனர். அவர்கள் இன்னமும் அடிமைத்தன மனநிலையில் இருந்து விடுபடவில்லை. அந்த அரசியல் தலைவர்கள், அந்நிய சக்திகளோடு கைகோத்து நாட்டை பலவீனப்படுத்த முயற்சி செய்கின்றனர். சமுதாயத்தில் பிரிவினையை தூண்டி, ஒற்றுமையை சீர்குலைக்க தீவிர முயற்சி செய்கின்றனர். அவர்களின் சதியை, மக்கள் முறியடிக்க வேண்டும். உத்தர பிரதேசத்தின் பிரயாக்ராஜில் மகா கும்பமேளா நடைபெற்று வருகிறது. இந்த விழா நாட்டு மக்களை ஒன்றிணைக்கிறது. நாட்டின் மூலை, முடுக்கெல்லாம் மகா கும்பமேளா குறித்து மக்கள் பேசுகின்றனர். கோடிக்கணக்கான மக்கள் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடி உள்ளனர். பிரயாக்ராஜில் பக்தி மட்டுமன்றி சமூக சேவையும் நடைபெற்று வருகிறது. இதுவரை சுமார் 2 லட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு இலவசமாக கண் பரிசோதனை நடத்தப்பட்டு உள்ளது. சுமார் 1.5 லட்சம் பேருக்கு இலவசமாக மருந்துகள், கண் கண்ணாடிகள் வழங்கப்பட்டு உள்ளன. 16,000 பேருக்கு இலவசமாக கண் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு உள்ளது. இந்து கோயில்கள், வழிபாட்டுத் தலங்கள் மட்டுமல்ல. அவை மக்களுக்கு சேவையாற்றும் புனிதத் தலங்களாக விளங்குகின்ற. நமது சாதுக்கள் ஆயுர்வேதம், யோகாவை உலகத்துக்கு நன்கொடையாக வழங்கி உள்ளனர். நான் ஏழை குடும்பத்தை சேர்ந்தவன். ஏழைகளின் துன்பம் எனக்கு தெரியும். நாடு முழுவதும் ஏழை குடும்பங்களின் நலனுக்காக ஆயுஷ்மான் மருத்துவ காப்பீட்டை திட்டத்தை அமல்படுத்தினேன். நாடு முழுவதும் மக்கள் மருந்தகங்கள் திறக்கப்பட்டு உள்ளன. வெளிசந்தையில் ரூ.100-க்கு விற்கப்படும் மருந்து, மக்கள் மருந்தகத்தில் ரூ.15-க்கு கிடைக்கிறது. நாடு முழுவதும் 700 மாவட்டங்களில் 1,500 டயாலசிஸ் மையங்கள் திறக்கப்பட்டு உள்ளன. இந்த மையங்களில் சிறுநீரக நோயாளிகளுக்கு இலவசமாக சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. புற்றுநோய் மிகப்பெரிய பிரச்சினையாக உருவெடுத்து இருக்கிறது. இதை கருத்தில் கொண்டு மத்திய பட்ஜெட்டில் பல்வேறு அறிவிப்புகள் வெளியிடப்பட்டு உள்ளன. புற்றுநோயை தடுக்க புகையிலை பொருட்களைஅறவே தவிர்க்க வேண்டும். புற்றுநோய்க்கான அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக மருத்துவ பரிசோதனை செய்ய வேண்டும். அடுத்த 3 ஆண்டுகளில் ஒவ்வொரு மாட்டத்திலும் புற்றுநோய் சேவை மையங்கள் திறக்கப்படும். இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி பேசினார்.

## இந்தியாவில் 7 திட்டங்களுக்கு 750 மில்லியன் டாலர் அமெரிக்க நிதி




இந்தியாவில் 7 திட்டங்களுக்கு 750 மில்லியன் டாலர் அதாவது இந்திய மதிப்பில் சுமார் ரூ.6,500 கோடி மதிப்பிலான நிதியுதவியை அமெரிக்காவின் சர்வதேச மேம்பாட்டுக்கான நிறுவனம் (யுஎஸ்ஏஐடி) வழங்கி வருவதாக மத்திய நிதியமைச்சகம் அதன் ஆண்டறிக்கையில் தெரிவித்துள்ளது. 2023-24-ம் நிதியாண்டுக்கான அறிக்கையில் நிதியமைச்சகம் கூறியுள்ளதாவது: இந்தியாவில் தற்போது 750 மில்லியன் டாலர் மதிப்பிலான ஏழு திட்டங்கள் அமெரிக்க சர்வதேச மேம்பாட்டு நிறுவனத்தின் நிதியுதவியின் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த 2023-24-ம் நிதியாண்டில் மட்டும் இதற்காக 97 மில்லியன் டாலரை அதாவது ரூ.825 கோடியை யுஎஸ்ஏஐடி வழங்கியுள்ளது. வாக்குப்பதிவை அதிகரிப்பதற்காக எந்த நிதியுதவியும் வழங்கப்படவில்லை. ஆனால், விவசாயம் மற்றும் உணவுப் பாதுகாப்பு, தண்ணீர், சுகாதாரம், புதுப்பிக்கத்தக்க ஆற்றல்; பேரிடர் மேலாண்மை மற்றும் உடல் ஆரோக்கிய திட்டங்களுக்கு அந்த நிதியாண்டில் அமெரிக்கா நிதியுதவி அளித்துள்ளது. மேலும், நிலையான காடுகள் பராமரிப்பு மற்றும் காலநிலை தகவமைப்பு , ஆற்றல் திறன் தொழில்நுட்ப வணிகமயமாக்கல் மற்றும் கண்டுபிடிப்பு திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவுக்கு கடந்த 1951 முதல் பரஸ்பர மேம்பாட்டுக்கான திட்டங்களுக்கு யுஎஸ்ஏஐடி நிதியுதவியை வழங்கி வருகிறது. பல்வேறு துறைகளில் இதுவரை 555 திட்டங்களுக்கு 17 பில்லியன் டாலர் மதிப்பிலான பொருளாதார உதவிகளை அமெரிக்கா வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.


# ஜெயலலிதா பிறந்த நாளுக்கு அரசு சார்பில் மரியாதை - அமைச்சர்கள் பங்கேற்பர் என தகவல்






சென்னை:பிப்-24 முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 77-வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழக அரசின் சார்பில் அவரின் திருவுருவச் சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நாளை நடைபெறவிருக்கிறது. மறைந்த முன்னாள் முதல்வரும், அதிமுக பொதுச்செயலாளராக இருந்தவருமான ஜெயலலிதாவின் 77-வது பிறந்தநாள் விழா பிப்., 24-ம் தேதி கொண்டாடப்பட உள்ளது. இந்நிலையில், நாளை காலை 9.30 மணிக்கு காமராசர் சாலையில் (மெரினா கடற்கரை) உள்ள ஜெ.ஜெயலலிதா வளாகத்தில் தமிழக அரசின் சார்பில் அவரின் திருவுருவச் சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெறவிருக்கிறது. இதில் அமைச்சர்கள் பங்கேற்கவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனிடையே, “ஜெயலலிதா பிறந்தநாளையொட்டி ஆடம்பர விழாக்களைத் தவிர்த்து, ஏழை மக்களுக்கு அவரவர் சக்திக்கேற்ப உதவிகளைச் செய்ய வேண்டும். அன்று கட்சிக் கொடிக் கம்பங்களுக்கு வர்ணம் பூசி, கொடிக்கம்பங்கள் இல்லாத இடங்களில் புதிய கொடிக் கம்பங்களை அமைத்தும், கட்சிக் கொடியை ஏற்றிவைத்தும் கொண்டாட வேண்டும். அவரது படத்துக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, இனிப்பு, அன்னதானம் மற்றும் நலத்திட்ட உதவிகளை கட்சியினர் வழங்க வேண்டும்” என் அதிமுக சார்பில் தெரிவிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# சென்னையில் புதிதாக கட்டப்பட்டு வரும் அரசு மருத்துவமனைக்கு பெரியார் பெயர் - முதல்வர் உத்தரவு





சென்னை:பிப்-24 சென்னையில் புதிதாக கட்டப்பட்டு வரும் அரசு மருத்துவமனைக்கு பெரியார் பெயரை முதல்வர் ஸ்டாலின் சூட்டினார். இதுகுறித்து முதல்வர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: ‘சென்னை, கொளத்தூர், பெரியார் நகரில் உள்ள அரசு புறநகர் மருத்துவமனை வளாகத்தில் 210 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தரை மற்றும் ஆறு தளங்களுடன் புதிய மருத்துவமனை கட்டப்பட்டுள்ளது. இம்மருத்துவமனைக்கு ‘பெரியார் அரசு மருத்துவமனை’ என்று பெயர் சூட்டிட தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் ஆணையிட்டுள்ளார். இம்மருத்துவமனை விரைவில் தமிழ்நாடு முதல்வரால் திறந்து வைக்கப்படவுள்ளது. பெரியார் நகரில் உள்ள அரசு புறநகர் மருத்துவமனையை சிறப்பு மருத்துவமனையாக தரம் உயர்த்த தமிழக முதல்வர்8.3.2023 அன்று மூன்று தளங்களுடன் புதிய மருத்துவமனை கட்ட அடிக்கல் நாட்டினார். அதன் தொடர்ச்சியாக, மேலும் சில சிறப்பு சிகிச்சைகளை வழங்குவதற்காக கூடுதலாக மூன்று தளங்களுடன் விரிவாக்கம் செய்திட 7.3.2024 அன்று முதல்வர் அடிக்கல் நாட்டினார். மொத்தம் ஆறு தங்களுடன் கட்டப்பட்டுள்ள இப்புதிய மருத்துவமனையின் தரைத்தளத்தில் 20 படுக்கைகள் கொண்ட தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர சிகிச்சை முனைப்பு வார்டுகள், எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வசதி, புறநோயாளிகள் பிரிவுகள், முதல் தளத்தில் மகப்பேறு பிரிவு, அறுவை அரங்கங்கள், நவீன இரத்த வங்கி, இரண்டாம் தளத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான மருத்துவப் பிரிவுகள், மூன்றாம் தளத்தில் மகப்பேறு மற்றும் குடும்ப கட்டுப்பாடு வார்டு, நான்காம் தளத்தில் ஆண்கள் பொது மருத்துவப் பிரிவு, இரைப்பை குடலியல் பிரிவு, ஐந்தாம் தளத்தில் இருதயவியல் பிரிவு, அறுவை அரங்கங்கள், தோல்நோய் வார்டு, ஆறாம் தளத்தில் சிறப்பு சிகிச்சை வார்டுகள், புற்றுநோயியல் பிரிவு, நரம்பியல் பிரிவு போன்ற பல்வேறு பிரிவுகளுடன் மொத்தம் 260 படுக்கை வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது. இப்புதிய மருத்துவமனையினை முதல்வர் மு.க. ஸ்டாலின் இன்று (23.2.2025) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். முதல்வர் படைப்பகத்திற்கு முதல்வர் நேரில் சென்று ஆய்வு: சென்னை, கொளத்தூர், ஜெகநாதன் தெருவில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பகிர்ந்த பணியிட மையம் மற்றும் மாணவர்களுக்கான ‘கல்வி மையம்’ உள்ளிட்ட அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள முதல்வர் படைப்பகத்திற்கு மு.க. ஸ்டாலின் இன்று (23.2.2025) நேரில் சென்று பார்வையிட்டு, அங்கு படிக்கும் மாணவ, மாணவியர்கள் மற்றும் கோ-ஓர்க்கிங் ஸ்பேஸ் எனப்படும் பகிர்ந்தபணியிடத்தில்பணிபுரிவோர்களிடம் உரையாடி, அவர்களின் தேவைகள் குறித்து கேட்டறிந்தார். வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் இணைந்து 2.85 கோடி ரூபாய் செலவில் பகிர்ந்த பணியிட மையம் எனப்படும் ‘Co-working Space’ மற்றும் மாணவர்களுக்கான ‘கல்வி மையம்’ என அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய முதல்வர் படைப்பகத்தை தமிழக முதல்வர் 4.11.2024 அன்று திறந்து வைத்தார். முதல்வர் படைப்பகத்தில் UPSC, TNPSC போன்ற பல்வேறு வகையான போட்டித் தேர்வுகளில் கலந்துகொள்ளும் மாணவர்கள், படித்து பயன்பெறும் வகையில் அவர்களுக்கு தேவையான அனைத்து போட்டித் தேர்வுக்கான புத்தகங்களும் இடம் பெற்றுள்ளன. மேலும், மாணவர்கள் எந்த இடையூறுமின்றி படிக்கும் வகையில் அமைதியான சூழலும், நீண்ட நேரம் படிப்பதற்கு உகந்த இருக்கைகள், கணினி மற்றும் இணையதள வசதியும் செய்து தரப்பட்டுள்ளன. இக்கல்வி மையத்தில் தினமும் சுமார் 100 மாணவ, மாணவியர்கள் படித்து பயன்பெற்று வருகின்றனர். அத்துடன், போதிய இடவசதி இல்லாத காரணத்தினால் தொழில் தொடங்கிட இயலாத பெண்களுக்கும். ஆண்களுக்கும் தொழில் தொடங்குவதற்கு ஏதுவாக கோ-ஓர்க்கிங் ஸ்பேஸ் எனப்படும் பணி செய்வதற்காக ஒரு தளமும் அமைக்கப்பட்டுள்ளது. இந்த தளத்தில் சுமார் 40 நபர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இந்த ஆய்வின்போது, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ. ராசா, டாக்டர் கலாநிதி வீராசாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# அரசு ஊழியர், ஆசிரியர் சங்கங்களுடன் அமைச்சர்கள் குழு இன்று பேச்சுவார்த்தை



சென்னை:பிப்-24 அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர் சங்கங்களின் கோரிக்கைகளை பரிசீலித்து முடிவு காண, அமைச்சர்கள் குழுவை அமைத்து முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். சங்க நிர்வாகிகளுடன் அமைச்சர்கள் இன்று பேச்சுவார்த்தை நடத்துகின்றனர். மாநில அரசு ஊழியர்களுக்கு பங்களிப்பு ஓய்வூதிய திட்டம் கடந்த 2003 ஏப்ரல் 1-ம் தேதி முதல் அமல்படுத்தப்பட்டது. அதன்பிறகு, மத்திய அரசு ஊழியர்களுக்கு தேசிய ஓய்வூதிய திட்டம் கடந்த 2004 ஜனவரி 1-ம் தேதி அமல்படுத்தப்பட்டது. ஆனாலும், மாநில அரசு ஊழியர்களுக்கு தொடர்ந்து பங்களிப்பு ஓய்வூதிய திட்டமே தொடர அனுமதிக்கப்பட்டது. இதனால், அதிருப்தி அடைந்த தமிழக அரசு ஊழியர்கள் பழைய ஓய்வூதிய திட்டத்தை செயல்படுத்துமாறு தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். இந்த நிலையில், மத்திய அரசு ஊழியர்களுக்கான ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டம் குறித்து கடந்த ஆண்டு அறிவிப்பு வெளியானது. இதையடுத்து, தமிழக அரசின் நிதிநிலை மற்றும் அரசு ஊழியர்களின் ஓய்வூதிய கோரிக்கைகளையும் கருத்தில் கொண்டு, நடைமுறை சாத்தியம் உள்ள ஓய்வூதிய முறை குறித்து அரசுக்கு பரிந்துரை செய்ய, அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்றை அமைத்து தமிழக அரசு இம்மாத தொடக்கத்தில் அரசாணை வெளியிட்டது. இந்த குழுவில் ஊரக வளர்ச்சி, உள்ளாட்சி துறை செயலர் ககன்தீப் சிங் பேடி, மெட்ராஸ் ஸ்கூல் ஆஃப் எக்னாமிக்ஸ் கல்வி நிறுவனத்தின் முன்னாள் இயக்குநர் கே.ஆர். சண்முகம், நிதித் துறை துணை செயலரும், உறுப்பினர் செயலருமான பிரத்திக் தாயள் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இக்குழு தனது விரிவான அறிக்கை மற்றும் பரிந்துரையை 9 மாதங்களுக்குள் சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில், பல்வேறு அரசு ஊழியர் சங்கங்கள், ஆசிரியர் சங்கங்களின் கோரிக்கைகளை பரிசீலித்து அவற்றின் மீது உரிய முடிவு காண, அமைச்சர்கள் அடங்கிய ஒரு குழுவை அமைத்து முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். இந்த குழுவில் அமைச்சர்கள் எ.வ.வேலு (பொதுப்பணி), தங்கம் தென்னரசு (நிதி), அன்பில் மகேஸ் (பள்ளிக்கல்வி), கயல்விழி செல்வராஜ் (மனிதவளம்) ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர் சங்கங்களின் கோரிக்கைகள் குறித்து சங்க நிர்வாகிகளுடன் சென்னை தலைமைச் செயலகத்தில் அமைச்சர்கள் குழு இன்று (பிப்.24) பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாக தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 3 கோடி ஸ்மார்ட் மீட்டர் கொள்முதல் ஒரு வாரத்துக்குள் டெண்டர்: மின்வாரிய அதிகாரிகள் தகவல்



சென்னை: பிப்-24 மின்இணைப்புகளில் ஸ்மார்ட் மீட்டர் பொருத்துவதற்காக 3 கோடி ஸ்மார்ட் மீட்டர்களை கொள்முதல் செய்ய ஒரு வாரத்துக்குள் டெண்டர் விடப்பட உள்ளது. வீடுகள் உள்ளிட்ட மின்இணைப்புகளில் மின்நுகர்வை துல்லியமாக கணக்கெடுக்கவும், மின்இழப்பை தடுக்கவும், மின்கணக்கீட்டில் நிகழும் முறைகேடுகளை தடுத்து வருவாயை அதிகரிக்கும் நோக்கில் ஸ்மார்ட் மீட்டர் பொருத்த அனைத்து மாநில மின்வாரியங்களையும், மத்திய அரசு அறிவுறுத்தி வருகிறது. மேலும், 2026-ம் ஆண்டுக்குள் ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என காலக்கெடு நிர்ணயித்துள்ளது. அதற்குள் இத்திட்டத்தை நிறைவேற்றினால், மத்திய அரசு தரும் நிதியுதவி மானியமாக எடுத்துக் கொள்ளப்பட்டு, மீண்டும் செலுத்தத் தேவையில்லை. இல்லையெனில், அது கடனாக மாற்றப்பட்டு மீண்டும் திருப்பி செலுத்த வேண்டும். அதன்படி, தமிழக மின்வாரியம் ஸ்மார்ட் மீட்டர்களை பொருத்த முடிவு செய்தது. இதற்காக, கடந்த 2023-ம் ஆண்டு, வெவ்வேறு மாவட்டங்களை உள்ளடக்கி, 4 தொகுப்புகளாக பிரித்து 3 கோடி ஸ்மார்ட் மீட்டர் பொருத்தி, அதை 10 ஆண்டுகளுக்கு பராமரிக்கும் ஒப்பந்த நிறுவனத்தை தேர்வு செய்வதற்காக டெண்டர் விடுக்கப்பட்டது. ஆனால், பல்வேறு காரணங்களால் இந்த டெண்டர் ரத்து செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து, 8 மாவட்டங்களில் மட்டும் 82 லட்சம் ஸ்மார்ட் மீட்டர்களை கொள்முதல் செய்ய டெண்டர் விடப்பட்டது. இதில், அதானி எனர்ஜி சொல்யூஷன்ஸ் நிறுவனம் பங்கேற்று குறைந்த விலையை குறிப்பிட்டது. எனினும், மின்வாரியம் நிர்ணயித்த தொகையை விட இது அதிகமாக இருந்தது உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் இந்த ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது. இதையடுத்து, 3 கோடி ஸ்மார்ட் மீட்டர் கொள்முதலுக்கான டெண்டர் விரைவில் விடப்படும் என மின்வாரியம் அறிவித்தது. இந்நிலையில், அண்மையில் தமிழ்நாடு மின்வாரியத்தின் 128-வது வாரிய கூட்டத்தில் ஸ்மார்ட் மீட்டர்களை கொள்முதல் செய்வதற்காக புதிய டெண்டர்விட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதையடுத்து, ஒரு வாரத்துக்குள் ஸ்மார்ட் மீட்டர் கொள்முதல் செய்வதற்கான டெண்டர் விடும் பணி தொடங்கப்படும் என மின்வாரிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

## திஹா கிளினீக் சார்பில் நங்கநல்லூரில் மூத்த குடிமக்களின் விழிப்புணர்வு நடைபயணம்



சென்னை: பிப்-24 சென்னை நங்கநல்லூர் திஹா கிளினிக் சார்பில் ஆரோக்கியமாக இருந்தால், மகிழ்ச்சியாக இருக்கலாம் என்பதை வலியுறுத்தி மூத்த குடிமக்களின் விழிப்புணர்வு நடைப்பயணம் நேற்று நடைபெற்றது. 'ஆரோக்கியமாக இருந்தால், மகிழ்ச்சியாக இருக்கலாம்' என்பதை வலியுறுத்தி திஹா கிளினிக், நங்கநல்லூர் மூத்த குடிமக்கள் மன்றம், நங்கநல்லூர் நலச்சங்கங்களின் கூட்டமைப்பு ஆகியவற்றின் சார்பில் 'நடங்க நல்லூர்' என்ற விழிப்புணர்வு நடைப்பயணம் சென்னை நங்கநல்லூரில் நேற்று நடைபெற்றது. சுமார் 2 கிமீ தூரத்துக்கு நடத்தப்பட்ட இந்த விழிப்புணர்வு நடைப்பயணத்தில் 300-க்கும் மேற்பட்ட மூத்த குடிமக்கள் பங்கேற்றனர். நங்கநல்லூர் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளுக்கு மலிவு விலையில் உயர்தர மருத்துவச் சேவைகளை வழங்கி வரும் திஹா கிளினிக்கின் ஒரு முயற்சியாக இந்த நடைப்பயணம் மேற்கொள்ளப்பட்டது. நாம் வழக்கமாக மேற்கொள்ளும் நடைப்பயிற்சிகள் மூலம் மூத்த குடிமக்களின் உடல்நலம் மற்றும் ஆரோக்கியத்தின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த நிகழ்ச்சியின் நோக்கமாகும். மேலும் அருகில் உள்ள பகுதிகளை சேர்ந்தவர்களையும் நடைப்பயிற்சி மற்றும் உடற்பயிற்சியில் ஈடுபடுவதை ஊக்குவிக்கும் ஒரு வாய்ப்பாக இது நடத்தப்பட்டது. இதுதொடர்பாக விழிப்புணர்வு நடைபயணத்தில் கலந்துகொண்ட தமிழ்நாடு மூத்த குடிமக்கள் சங்கங்களின் கூட்டமைப்பு தலைவர் வி. ராமாராவ் பேசுகையில், "காலை வேளையில் நூற்றுக்கணக்கான மூத்த குடிமக்கள் உற்சாகமாக நடைப்பயிற்சி செய்வதை பார்க்கும் போது மகிழ்ச்சியாக உள்ளது. முதியோர்களுக்கான உடல் செயல்பாடுகளின் முக்கியத்துவத்தை இந்நிகழ்வு எடுத்துக் காட்டுகிறது. சுறுசுறுப்பான, ஆரோக்கியமான வாழ்கையை வாழ நாம் அவர்களை தொடர்ந்து ஊக்குவிப்போம்." என்று தெரிவித்தார். அதைத்தொடர்ந்து திஹா அறக்கட்டளையின் அறங்காவலர் ஸ்ரீனிவாசகோபாலன் சாரி பேசுகையில், "திஹா கிளினிக் சார்பில் நங்கநல்லூர் பகுதிகளில் இலவச பரிசோதனை முகாம்கள், சுகாதார விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை தொடர்ந்து நடத்தி வருகிறோம். இதன்மூலம் நங்கநல்லூர் பகுதியை சேர்ந்த மக்களுக்கு தேவையான மருத்துவ சேவையை தரமானதாகவும், குறைந்த விலையிலும் வழங்கி வருகிறோம். அந்தவகையில் இந்த நடைப் பயணமானது சுற்றியுள்ள சமூகத்தின் மீதான அக்கறையை காட்டும் வகையில் தீஹாகவின் மற்றுமொரு முன்னெடுப்பாகும்." என்று குறிப்பிட்டார்.

## இலங்கை கடற்படையினரால் 32 பேர் கைது: தமிழக மீனவர்களை மீட்க வலியுறுத்தி வெளியுறவு அமைச்சருக்கு முதல்வர் கடிதம்



சென்னை: பிப்-24 ராமேசுவரம்: இலங்கை கடற்படையினரால் ராமேசுவரம் மீனவர்கள் 32 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களை மீட்க தூதரக முயற்சிகளை மேற்கொள்ளுமாறு வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கருக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். ராமேசுவரம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து 450 விசைப்படகுகளில் சுமார் 3 ஆயிரம் மீனவர்கள் நேற்று முன்தினம் கடலுக்கு சென்றனர். நேற்று அதிகாலை மன்னார் கடல் பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த நிலையில், எல்லை தாண்டியதாக கூறி 5 படகுகளை இலங்கை கடற்படையினர் பறிமுதல் செய்தனர். 32 மீனவர்களை கைது செய்தனர். அவர்கள் அனைவரும் வவுனியா சிறையில் அடைக்கப்பட்டனர். இந்நிலையில், மத்திய வெளியுறவு துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு முதல்வர் ஸ்டாலின் நேற்று கடிதம் எழுதியுள்ளார். அதில் கூறியிருப்பதாவது: இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவது சமீபகாலத்தில் அதிகரித்துள்ளது. இதை தடுக்க இலங்கை அரசை வலியுறுத்த வேண்டும் என்று நான் பலமுறை கேட்டுக்கொண்ட போதிலும். கைது நடவடிக்கைகள் அதிக அளவில் தொடர்கின்றன. கடந்த 2 மாதங்களில் மட்டும் 119 மீனவர்கள் சிறை பிடிக்கப்பட்டு, 16 படகுகள் கைப்பற்றப்பட்டுள்ளன. நீண்ட காலமாக நிலுவையில் உள்ள இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண கூட்டு பணிக் குழுவை உடனே கூட்ட வேண்டும். மீனவர்கள் கைது செய்யப்படுவதை தடுக்க வும். இலங்கையில் இருந்து படகுகளுடன் மீனவர்களை விரைவில் விடுவிக்கவும் வலுவான தூதரக முயற்சி எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## மூத்த குடிமக்கள் ஆண்டுக்கு ஒரு முறை கட்டாயம் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்: முதியோர் நல மருத்துவர் வி.எஸ்.நடராஜன் அறிவுறுத்தல்



சென்னை: பிப்-24 60 முதல் 70 வயதுக்குள் ஆண்டுக்கு ஒரு முறை உடல் பரிசோதனை கட்டாயம் செய்ய வேண்டும் என்று டாக்டர் நடராஜன் அறிவுறுத்தினார். விஎச்எஸ் பன்னோக்கு சிறப்பு மருத்துவமனை சார்பில், மூத்த குடிமக்களுக்கான 'ஆரோக்கியம் 100' நிகழ்வு தொடக்க விழா தரமணியில் நேற்று நடைபெற்றது. இதை வி.எஸ்.நடராஜன் முதியோர் நல அறக்கட்டளை நிறுவனர் டாக்டர் வி.எஸ். நடராஜன் தொடங்கி வைத்து பேசியதாவது: மூத்த குடிமக்கள் வீட்டுக்கு சென்று சிகிச்சை அளிப்பது அவர்களுக்கு மிகப்பெரிய உதவியாக இருக்கும். இதனால், உரிய நேரத்தில் சிகிச்சை அளிக்க முடியும். மேலும், மூத்த குடிமக்களை எப்படி கவனிக்கிறார்கள், நிதி நிலவரம் என எல்லா விஷயங்களையும் அறிந்து கொள்ள முடியும். மூத்த குடிமக்களுக்கு நோய் வந்தபிறகு, எல்லா மருத்துவமனைகளிலும் சிகிச்சை அளிக்க முடியும். ஆனால், அவர்களுக்கு நோய் வராமல் காப்பதே மிக முக்கியம். 60 முதல் 70 வயதுக்குள் ஆண்டுக்கு ஒரு முறை உடல் பரிசோதனை கட்டாயம் செய்ய வேண்டும். மூத்த குடிமக்கள் தங்களுக்கு உடல் பிரச்னை இல்லை என்று நினைத்து கொண்டு இருப்பார்கள். ஆனால், இதயப் பிரச்சனை, ரத்த அழுத்தம், சர்க்கரை நோய், புற்றுநோய் என பல நோய்கள் அமைதியாக அறிகுறியின்றி இருக்கும். எனவே, ஆண்டுக்கு ஒரு முறை பரிசோதனை செய்து கொண்டால், பல நோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டுபிடித்து சிகிச்சை அளிக்கமுடியும். இதற்கடுத்து, நடைபயிற்சி மேற்கொள்ள வேண்டும். இதுதவிர, நிமோனியா தடுப்பூசி போட்டுகொள்ள வேண்டும். மேலும், இன்ஃப்ளுயன்ஸா தடுப்பூசி, தேவைப்படுவோருக்கு போட்டு கொள்ளலாம். நிம்மோனியா தடுப்பூசி ஒரு முறையும், இன்ஃப்ளுயன்ஸா ஆண்டுக்கு ஒரு முறை போட்டு கொள்ள வேண்டும். இதன் மூலமாக, ரத்து அழுத்தம், சர்க்கரை நோய் கட்டுப்படுத்தப்படும். அண்மைகாலமாக, மூத்த குடிமக்களுக்கு வைட்டமின்-டி பற்றாக்குறை பிரச்சினை ஏற்பட்டு வருகிறது. கடும் வலியால் பாதிக்கப்பட்டு, சிகிச்சைக்காக வருபவர்களை பரிசோதிக்கும்போது, வைட்டமின்- டி பற்றாக்குறை இருப்பது தெரிகிறது. இதற்கு உடலில் சூரிய ஒளி படாமல் இருப்பதே காரணமாகும். எனவே, நமது உடலில் சூரிய ஒளி பட வேண்டும். தினசரி நடைபயிற்சி மேற்கொள்ள வேண்டும். இதுதவிர, புரதச்சத்து மிக்க உணவு எடுத்து கொள்ள வேண்டும். இதனால், உடல் நலத்தை பாதுகாக்க முடியும். இவ்வாறு அவர் பேசினார். நிகழ்ச்சியில், விஎச்எஸ் மருத்துவமனை கவுரவ செயலர் சுரேஷ் சேஷாத்ரி கூறுகையில், "ஆரோக்கியம் 100 மூலமாக, மூத்த குடிமக்களுக்கு 100 நாட்களுக்கு இலவச மருத்துவ ஆலோசனை வழங்கப்படும். அவர்களின் மருத்துவ சிகிச்சைக்காக, ஆரோக்கியம் அட்டை கொடுக்கப்படும். இந்த அட்டையில் பதிவு செய்தபிறகு, மருத்துவ சிகிச்சைக்கு 10 சதவீதம் சலுகை வழங்கப்படும். மூத்த குடிமக்களுக்காக, இலவச பதிவு, 5 கி.மீ. சுற்றளவுக்குள் இலவச ஆம்புலன்ஸ் வசதி ஆகியவை வழங்கப்படும். இதுதொடர்பாக மேலும் விவரங்களுக்கு 9150017981 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்" என்றார். நிகழ்ச்சியில், கவி மாமணி துரைசாமி சிவகாமி ராமையா, மருத்துவமனை பொதுமேலாளர் (இயக்கம்) ஸ்ருதி பார்கவா, நீரிழிவு மற்றும் நாளமில்லா சுரப்பியியல் துறை தலைர் உஷா ஸ்ரீராம், சென்னை மருத்துவக்கல்லூரி முன்னாள் முதல்வர் டாக்டர் கனகசபை, மருத்துவ ஆலோசகர் செந்தில் குமார் உள்பட பலர் பங்கேற்றனர்.

## கோடம்பாக்கம் பவர்ஹவுசில் மெட்ரோ ரயில் நிலைய பணி தொடக்கம்



சென்னை: பிப்-24 இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில், பூந்தமல்லி பைபாஸ் - கலங்கரை விளக்கம் வரையிலான 4-வது வழித்தடத்தில் கோடம்பாக்கம் பவர்ஹவுஸ் பகுதியில் மெட்ரோ மேம்பாலத்தில் ரயில் நிலையம் அமைக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளன. சென்னையில் இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில், பூந்தமல்லி பைபாஸ் - கலங்கரை விளக்கம் வரை ஒரு வழித்தடமாக (4 -வது வழித்தடம்) மெட்ரோ ரயில் பணிகள் நடைபெறுகின்றன. கலங்கரை விளக்கம் முதல் கோடம்பாக்கம் மேம்பாலம் வரை சுரங்கப்பாதையாகவும், பவர்ஹவுஸ் முதல் பூந்தமல்லி பைபாஸ் வரை மேம்பால பாதையாகவும் அமைக்கப்படுகிறது. பல இடங்களில் மெட்ரோ ரயில் பாதை அமைக்கும் பணி, மெட்ரோ ரயில் நிலையப் பணி ஆகியபணிகள் தொடங்கி நடைபெறுகின்றன. இந்நிலையில், கோடம்பாக்கம் பவர்ஹவுஸ் பகுதியில் மெட்ரோ மேம்பாலத்தில் ரயில் நிலையம் அமைக்கும் பணி தொடங்கி நடைபெற்று வருகிறது. இது குறித்து, சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது: கலங்கரை விளக்கம் - பூந்தமல்லி வழித்தடத்தில் 26.1 கி.மீ. மெட்ரோ ரயில் பணிகள் முழுவீச்சில் நடைபெறுகின்றன. இதில் 30 மெட்ரோ ரயில் நிலையங்கள் அமைய உள்ளன. இதில், கோடம்பாக்கம் பவர்ஹவுஸ் பகுதியில், 22 மீட்டர் அகலத்திலும், 140 மீட்டர் நீளத்திலும் மேம்பால மெட்ரோ ரயில் நிலையம் அமைக்கும் பணி தொடங்கி உள்ளது 4 மின்தூக்கி, 9 நகரும்படிக்கட்டு போன்ற பயணிகளுக்கான அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்படும். பூந்தமல்லி - கலங்கரை விளக்கம் வழித்தடத்தில் ஒரு பகுதியாக பூந்தமல்லி வரையிலான மேம்பாலப்பாதையில் 55 சதவீதம் கட்டுமானப்பணிகள் முடிந்து உள்ளன. இந்த ஆண்டு இறுதிக்குள் பணிகள் நிறைவடையும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## காலாவதியான அஞ்சல் ஆயுள் காப்பீடுகளை புதுப்பிக்க 3 மாதத்துக்கு சிறப்பு முகாம்


காலாவதியான அஞ்சல் ஆயுள் காப்பீடுகளை புதுப்பிக்க, வரும் மார்ச் முதல் மே மாதம் வரை 3 மாதங்கள் சிறப்பு முகாம் நடைபெறுகிறது. அஞ்சல் நிலையங்களில் அஞ்சல் ஆயுள் காப்பீடு (பி.எல்.ஐ.), ஊரக அஞ்சல் ஆயுள் காப்பீடு (ஆர். பி.எல்.ஐ.) விற்பனை செய்து வருகிறது. இக்காப்பீடுகளை எடுப்பவர்களில் சிலர் முறையாக பிரீமியம் கட்டத் தவறுகின்றனர். இதனால், காப்பீடுகள் காலாவதி ஆகி, அதன் பலன்களை பெற முடியாத நிலை ஏற்படுகிறது. இவ்வாறு காப்பீடு காலாவதியான காப்பீட்டுதாரர்களின் வசதிக்காக, அஞ்சல்துறை சார்பில் காலாவதியான காப்பீடுகளை புதுப்பிக்க வரும் மார்ச் 1-ம் தேதி முதல் மே 31-ம் தேதி வரை சிறப்பு முகாம்கள் நடைபெறுகிறது. அனைத்து அஞ்சலகங்களிலும் இந்த முகாம் காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும். இதில், காப்பீட்டு பிரீமியத்திற்கான காலாவதிக் கட்டணத்தில் சலுகைகளும் வழங்கப்பட உள்ளன. இதன்படி, அஞ்சல் ஆயுள் காப்பீடு, ஊரக அஞ்சல் ஆயுள் காப்பீடுகளை புதுப்பிப்பதற்கான பிரீமியத் தொகை ரூ.1 லட்சம் வரை தாமத கட்டணத்தில் 25 சதவீதமும், அதிகபட்ச தள்ளுபடி தொகை ரூ.2,500 வரை வழங்கப்படும். ரூ.1 லட்சம் முதல் ரூ.3 லட்சம் வரை தாமத கட்டணத்தில் 25 சதவீதமும், அதிகபட்ச தள்ளுபடி தொகை ரூ.3 ஆயிரமும் வழங்கப்படும். ரூ.3 லட்சம் மற்றும் அதற்கு மேல் தாமத கட்டணத்தில் 35 சதவீதமும், அதிகபட்ச தள்ளுபடி தொகை ரூ.3,500-ம் வழங்கப்படும் என அஞ்சல்துறை தெரிவித்துள்ளது.

# சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த தமிழக அரசு தயங்குவது ஏன்? - ராமதாஸ் கேள்வி



கும்பகோணம்:பிப்-24 சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த தமிழக அரசு தயங்குவது ஏன் என்று கும்பகோணத்தில் நடந்த சமய-சமுதாய நல்லிணக்க மாநாட்டில் ராமதாஸ் கேள்வி எழுப்பினார். வன்னியர் சங்கம் சார்பில், சோழமண்டல சமய-சமுதாய நல்லிணக்க மாநாடு தாராசுரத்தில் நேற்று நடைபெற்றது. மாநாட்டுக் குழுத் தலைவர் ம.க.ஸ்டாலின் வரவேற்றார். வன்னியர் சங்கத் தலைவர் பு.தா.அருள்மொழி தலைமை வகித்தார். கவுரவத் தலைவர் ஜி.கே.மணி வாழ்த்துரையாற்றினார். இதில் பாமக மாநிலத் தலைவர் அன்புமணி பேசியது: ஏழ்மை, அறியாமை, மது போதைக்கு எதிராக தொடர்ந்து போராடி வருகிறோம். தமிழகத்தில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தி, அனைத்துத் தரப்பினருக்கும் இடஒதுக்கீடு வழங்க வேண்டும். ஆனால், முதல்வர் மு.க.ஸ்டாலின் சாதிவாரி கணகெடுப்பு நடத்த மாநில அரசுக்கு அதிகாரம் இல்லை என்று தவறான தகவலைத் தெரிவிக்கிறார். எனவே, அடுத்த தேர்தலில் மக்கள் பாடம் புகட்டுவர். தமிழகத்தில் 69 சதவீத இடஒதுக்கீட்டைப் பாதுகாக்க சாதிவாரி கணக்கெடுப்பு அவசியம். இது தொடர்பான எங்கள் போராட்டங்களை கொச்சைப்படுத்த வேண்டாம். சாதியை வைத்து அரசியல் செய்ய எங்களுக்கு விருப்பம் இல்லை. இவ்வாறு அன்புமணி பேசினார். பாமக நிறுவனர் ராமதாஸ் பேசியதாவது: தமிழகத்தில் உள்ள 364 சாதிகளும் முன்னேறினால்தான் தமிழகம் முன்னேறும். ஏற்றதாழ்வுகளைக் களைய சாதிவாரி கணகெடுப்பு நடத்த வேண்டும். ஆந்திராவில் பிற்படுத்தப்பட்டோருக்கு வேலைவாய்ப்பு, கடனுதவி திட்டங்கள் உள்ளன. தமிழகத்தில் 3 முறை சாதிவாரி கணெடுப்பு நடத்த வாய்ப்புக் கிடைத்தும், சிலரின் சதியால் அது நடைபெறவில்லை. சாதிவாரி கணகெடுப்பு நடத்த மாநில அரசுக்கு அதிகாரம் உண்டு. கர்நாடகா, தெலங்கானா மாநிலங்களில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளது. ஆனால், தமிழகத்தில் மட்டும் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த தமிழக அரசு தயங்குவது ஏன்? தமிழகத்தில் 6.50 லட்சம் காலி பணியிடங்கள் உள்ளன. தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பில் 80 சதவீதம் உள்ளூர் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க வேண்டும். தமிழக மக்களுக்கு இன்னும் தெளிவு பிறக்கவில்லை. 2026-ம் தேர்தலின்போது தெளிவு பிறந்து விடும். மது இல்லாவிட்டால் வேலைவாய்ப்பு அதிகரித்து, சமுதாய நல்லிணக்கம் பெருகும். இவ்வாறு அவர் பேசினார். வன்னியர் சங்க மாவட்டச் செயலாளர் மதி. விமல் நன்றி கூறினார்.

# நியோமேக்ஸ் சொத்துகளை முடக்கக் கோரி வழக்கு: போலீஸார் நடவடிக்கை எடுக்க நீதிமன்றம் உத்தரவு



மதுரை:பிப்-24 நியோமேக்ஸ் நிறுவன சொத்துகளை முடக்கக் கோரிய மனு மீது நடவடிக்கை எடுக்குமாறு போலீஸாருக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. நியோமேக்ஸ் முதலீட்டாளர்கள் சங்கச் செயலாளர் சங்கரநாராயணன், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருப்பதாவது: மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்ட நியோமேக்ஸ் நிதி நிறுவனம் பல்வேறு நகரங்களில் அலுவலகம் தொடங்கி, பொதுமக்களிடம் முதலீடு வசூலித்து மோசடியில் ஈடுபட்டுள்ளது. இந்த மோசடி தொடர்பாக, மதுரை பொருளாதாரக் குற்றப்பிரிவு போலீஸில் புகார் அளிக்கப்பட்டது. போலீஸார் வழக்குப் பதிந்து, நியோமேக்ஸ் இயக்குநர்கள், முகவர்கள் என பலரைக் கைது செய்துள்ளனர். இந்த நிறுவனம் பொதுமக்கள் முதலீட்டைக் கொண்டு, மாநிலம் முழுவதும் நிலங்களை வாங்கியுள்ளது. திருச்சி, குற்றாலம், கயத்தாறு, கோவில்பட்டி, ராமேசுவரம், நெல்லை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் நியோமேக்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான நிலங்கள் உள்ளன. பல சொத்துகள் பினாமிகள் பெயரில் வாங்கப்பட்டுள்ளன. இந்த நிலங்களின் மொத்த மதிப்பு ரூ1,671 கோடிக்கு மேல் இருக்கும். இந்த சொத்துகளை விற்பனை செய்து, முதலீட்டாளர்களுக்குப் பணத்தைத் திரும்ப வழங்க நடவடிக்கை எடுக்குமாறு போலீஸாரிடம் மனு அளித்தோம். போலீஸார் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது. இந்த மனு நீதிபதி தனபால் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. மனுதாரர் தரப்பில், நியோ மேக்ஸ் நிறுவனம், நூற்றுக்கும் மேற்பட்ட துணை நிறுவனங்களைத் தொடங்கி, பொதுமக்களிடம் பணம் கோடிக்கணக்கில் வசூலித்து மோசடி செய்துள்ளது. இந்த நிறுவனங்களின் சொத்துகளை முடக்க போலீஸார் நடவடிக்கை எடுக்கவில்லை" என கூறப்பட்டது. இதையடுத்து மனுதாரரின் மனுவை போலீஸார் ஒரு மாதத்தில் பரிசீலித்து, சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

# பொள்ளாச்சி ரயில் நிலைய பெயர் பலகையில் இந்தி அழிப்பு: திமுகவினர் மீது ரயில்வே போலீஸார் வழக்கு




பொள்ளாச்சி:பிப்-24 மத்திய அரசின் மும்மொழி கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து பொள்ளாச்சி ரயில் நிலையத்தின் பெயர் பலகையில் எழுதப்பட்டிருந்த இந்தி எழுத்துகளை கருப்பு பெயிண்ட் பூசி அழித்த திமுகவினர் மீது ரயில்வே போலீஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர். தமிழகத்தில் தேசிய கல்வி கொள்கையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என மத்திய அரசு வலியுறுத்தி வருகிறது. கல்விக்காக மத்திய அரசு தர வேண்டிய நிதியை தர மறுத்துள்ளது. இது இந்தியை திணிக்கும் முயற்சி என திமுக உள்ளிட்ட தமிழக கட்சிகள் மற்றும் பல்வேறு இயக்கங்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. ஒரு சில இடங்களில் பல்வேறு அமைப்புகள் மத்திய அரசுக்கு எதிராக போராட்டங்களை நடத்தி வருகின்றன. இந்நிலையில் தமிழகத்தில் இந்தி மொழி திணிப்பிற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக இன்று காலை திமுகவின் சட்ட திட்ட திருத்த குழு உறுப்பினர் தென்றல் செல்வராஜ் தலைமையில் நகரமன்ற உறுப்பினர் செந்தில்குமார், கோவை மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மணிமாறன் தென்றல், முன்னாள் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தனம் தங்கதுரை உள்ளிட்ட திமுகவினர், பொள்ளாச்சி ரயில் நிலையத்தில் உள்ள ரயில் நிலைய சந்திப்பு பெயர் பலகையில் தமிழ், ஆங்கிலம், இந்தி என மும்மொழியில் பொள்ளாச்சி என எழுதப்பட்டு இருந்த பெயரில் இருந்த இந்தி எழுத்துகளை கருப்பு பெயிண்ட் மூலம் அழித்து எதிர்ப்பை தெரிவித்தனர். இதையடுத்து சம்பவ இடத்துக்கு சென்ற ரயில்வே போலீஸார், பெயர் பலகையில் இந்தி எழுத்துகள் மீது பூசப்பட்ட கருப்பு பெயிண்டை அகற்றி தமிழ், இந்தி, ஆங்கிலம் என மும்மொழிகளிலும் பொள்ளாச்சி சந்திப்பு என்னும் பெயர் தெரியும்படி செய்தனர். இது குறித்து கூறிய பொள்ளாச்சி ரயில்வே போலீஸ் எஸ்.ஐ. உன்னிகிருஷ்ணன், "பொள்ளாச்சி ரயில் நிலையத்தில் இன்று காலை நேரத்தில் ஒரே ஒரு போலீஸார் மட்டுமே பணியில் இருந்துள்ளார். அதனால் அவர்கள் பெயிண்ட் பூசி அதை தடுக்க முடியவில்லை. இச்சம்பவம் தொடர்பாக 4 பேர் மீது ரயில்வே பாதுகாப்பு சட்டம் 166,147,145 (ஆ) ஆகிய பிரிவுகளில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது" என்றார்.

# தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்குகிறது: அமைச்சர் ஐ.பெரியசாமி



திண்டுக்கல்:பிப்-24 தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் குறைகளை கண்டறிவதிலும், முறைகேட்டில் ஈடுபட்டவர்கள் மீதும் நடவடிக்கை எடுப்பதிலும் தமிழக அரசு முனைப்புடன் செயல்படுவதால், தேசிய அளவில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்குகிறது என அமைச்சர் ஐ.பெரியசாமி தெரிவித்துள்ளார். தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் முறைகேடுகள் நடப்பதாக பாமக நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வெளியிட்ட குற்றச்சாட்டிற்கு பதில் அளித்து, ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில், "மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் மத்திய அரசின் அறிவிக்கையின்படி தமிழ்நாடு அரசு ஒரு தற்சார்பற்ற சமூக தணிக்கை சங்கத்தினை தோற்றுவித்து 2012-13 ஆம் ஆண்டு முதல் சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது. சமூக தணிக்கையினை முறையாக நடத்துவதிலும், குறைகளை கண்டறிவதிலும், முறைகேட்டில் ஈடுபட்டவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதிலும் தமிழ்நாடு அரசு முனைப்புடன் செயல்படுவதால், தேசிய அளவில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்குகிறது. சமூக தணிக்கை ஆரம்பிக்கப்பட்ட 2012-13ம் ஆண்டு முதல் 2023-24 ஆம் ஆண்டு வரை, மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணிகளில் சமூக தணிக்கை அறிக்கைகளின் படி மொத்தம் ரூ.291.46 கோடி நிதி இழப்பீடு எனத் தெரிவிக்கப்பட்டது. பின்னர் மாவட்ட அளவில் இதுகுறித்து ஆய்வு செய்யப்பட்டும், ஏற்புடைய பத்திகள் கண்டறியப்பட்டும், மாவட்ட ஆட்சித்தலைவர்களால் உயர்மட்டக்குழுவில் வசூல் செய்யப்பட வேண்டிய தொகை ரூ.105.35 கோடி என முடிவு செய்யப்பட்டது. பின்னர் அரசின் தீவிர முயற்சியின் மூலம் இதில் ரூ.98.26 கோடி தொகை வசூல் செய்யப்பட்டு அதாவது 93 சதவீதம் அரசின் தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் முறைகேட்டில் ஈடுபட்டவர்கள் மீது தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. 2024-25ஆம் ஆண்டிலும், சமூக தணிக்கை நடைபெற்று, 79,122 குறை பத்திகள் என இதுவரை அறிக்கை அளிக்கப்பட்டுள்ளது. இதில் 30,198 பத்திகள் நிதி இழப்பீடு பத்திகள் எனவும், அதற்கான தொகை ரூ.14.07 கோடி எனவும், மீதமுள்ள 48,924 பத்திகள் நிதி இழப்பீடு இல்லாத சாதாரண பத்திகள் எனவும் அறிக்கை பெறப்பட்டது. இப்பத்திகள் ஆட்சித்தலைவர்களால் ஆய்வு செய்யப்பட்டு, உயர்மட்டக்குழுவில் 6,437 பத்திகள் மற்றும் ரூ.2.04 மாவட்ட கோடி நிதி இழப்பீடு என முதற்கட்டமாக முடிவு செய்யப்பட்டது. மேலும் இதில் வசூல் செய்யப்பட வேண்டிய பத்திகளாக 6,215 பத்திகளும் நிதி இழப்பீட்டு தொகையாக இதுவரை ரூ.1.94 கோடி என இறுதி செய்யப்பட்டுள்ளது. மீதத் தொகை குறித்து உயர்மட்டக்குழுக் கூட்டம் மூலம் முடிவு செய்யப்பட சீரிய முயற்சிகள் நடைபெற்று வருகிறது. இது மாநில அளவில் கண்காணிக்கப்பட்டும் வருகிறது. மேற்படி நிதி இழப்பீடு தொகை ரூ.194 கோடியில் சம்மந்தப்பட்டவர்களிடமிருந்து ரூ.193 கோடி வசூல் செய்யப்பட்டு அரசின் தலைப்பில் கட்டப்பட்டு உள்ளது. இதன் தொடர்ச்சியாக, மேற்படி முறைகேட்டிற்கு காரணமானவர்கள் மீதும் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மீதமுள்ள பத்திகளின் மீதும் மாவட்ட ஆட்சித்தலைவர்களால் உயர்மட்டக்குழு கூட்டம் நடத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வனைத்து பணிகளும் இந்நிதியாண்டிற்குள் முடிக்கப்படும்" என தெரிவித்துள்ளார்.

# சிதம்பரத்தில் வரும் 26 முதல் 5 நாட்களுக்கு நாட்டியாஞ்சலி விழா



கடலூர்:பிப்-24 சிதம்பரம் நாட்டியாஞ்சலி அறக்கட்டளை சார்பில் 44-வது ஆண்டு நாட்டியாஞ்சலி வருகிற 26-ம் தேதி தொடங்கி மார்ச் 2-ம் தேதி வரை 5 நாள்கள் தெற்கு ரத வீதி ராஜா சர் அண்ணாமலை செட்டியார் டிரஸ்ட் வளாகத்தில் நடைபெறுகிறது என அறக்கட்டளை செயலாளர் வழக்கறிஞர் ஏ.சம்பந்தம் தெரிவித்துள்ளார். சிதம்பரம் ஸ்ரீநடராஜர் கோயிலில் நாட்டியாஞ்சலி அறக்கட்டளை சார்பில் 1981-ல் நாட்டியாஞ்சலி விழா தொடங்கப்பட்டு 2014 வரை 33 ஆண்டுகள் நடத்தப்பட்டது. இந்நிலையில் நடராஜர் கோயிலை பொதுதீட்சிதர்களே நிர்வகிக்கலாம் என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தையடுத்து 2015-ம் ஆண்டு பொதுதீட்சிதர்களே நாட்டியாஞ்சலியை நடத்துவதாக அறிவித்து கோயிலில் தில்லை நாட்டிய அஞ்சலி டிரஸ்ட் சார்பில் நாட்டியாஞ்சலியை நடத்தினர். இதனால் நாட்டியாஞ்சலி அறக்கட்டளையினர் தெற்கு ரத வீதி ராஜாசர் அண்ணாமலை செட்டியார் டிரஸ்ட் வளாகத்தில் நாட்டியாஞ்சலி விழா நடத்தி வந்தனர். நடராஜர் கோயிலில் கடந்த 2015-ம் ஆண்டு முதல் கோயில் பொதுதீட்சிதர்கள் நடத்தி வந்த நாட்டியாஞ்சலி விழா 2022-ம் ஆண்டு முதல் நிறுத்தப்பட்டது. இந்நிலையில், இந்த ஆண்டு 44-வது ஆண்டு நாட்டியாஞ்சலி விழா நாட்டியாஞ்சலி அறக்கட்டளை சார்பில் வருகிற 26-ம் தேதி தொடங்கி 5 நாள்கள் நடைபெறுகிறது. இந்த நிலையில் இன்று (பிப்.23) இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய நாட்டியாஞ்சலி அறக்கட்டளை செயலாளர் வழக்கறிஞர் ஏ.சம்பந்தம், "நாட்டியாஞ்சலியில் நாடகம், கதக், கூச்சுப்புடி, மணிப்புரி நடனம் உள்ளிட்ட நாட்டிய நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது. இதில் வடமாநிலங்களிலிருந்தும், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் நாட்டியக் கலைஞர்கள் பங்கேற்று நாட்டிய அஞ்சலி செலுத்துகின்றனர். இதில் 450-க்கு மேற்பட்ட கலைஞர்கள் கலந்து கொள்கின்றனர். இளம் கலைஞர்களுக்கு அதிக வாய்ப்பு அளித்துள்ளோம். சிதம்பரத்தில் நாட்டிய அஞ்சலி விழா தொடங்கிய பிறகு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் நாட்டியம் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு கோயில்களில் சிவராத்திரி அன்று நிகழ்ச்சி நடைபெறுகிறது. நாட்டியப் பள்ளியும் அதிக அளவில் அதிகரித்துள்ளது. வெளிநாட்டு கலைகள் அனைத்தும் தமிழகத்திலிருந்து சென்ற நாட்டிய கலைகள் தான்" என தெரிவித்தார். நாட்டியாஞ்சலி அறங்காவலர் குழுத் தலைவர் டாக்டர் ஆர்.முத்துக்குமரன், துணைத்தலைவர் சக்தி ஆர். நடராஜன், பொருளாளர் எம். கணபதி மற்றும் உறுப்பினர்கள் உடன் இருந்தனர்.

# ஒகேனக்கல் காவிரியில் ஒகேனக்கல் நீர்வரத்து 1,200 கனஅடியாக சரிவு



தருமபுரி:பிப்24 ஒகேனக்கல் காவிரியாற்றில் நேற்று நீர்வரத்து விநாடிக்கு 1,200 கனஅடியாகக் குறைந்தது. தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் காவிரியாற்றில் கடந்த 20-ம் தேதி காலை அளவீட்டின்போது நீர்வரத்து விநாடிக்கு 500 கனஅடியாக பதிவானது. 21-ம் தேதி காலையில் விநாடிக்கு 1,500 கனஅடியாக உயர்ந்தது. இந்நிலையில், நேற்று காலை அளவீட்டின்போது விநாடிக்கு 1,200 கனஅடியாகக் குறைந்துள்ளது. மேட்டூர் அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 491 கனஅடியாக சரிந்துள்ளது. மேட்டூர் அணைக்கு நேற்று முன்தினம் விநாடிக்கு 641 கன அடியாக இருந்த நீர்வரத்து நேற்று 491 கன அடியாக சரிந்தது. அணையிலிருந்து குடிநீர் தேவைக்காக விநாடிக்கு 500 கனஅடி நீர் திறக்கப்பட்டு வருகிறது. அணையின் நீர்மட்டம் 109.93 அடியாகவும், நீர்இருப்பு 78.30 டி.எம்.சியாகவும் இருந்தது.

## வீடு புகுந்து திருடிய வழக்கில் ஞானசேகரனிடம் இருந்து 100 பவுன் நகைகள் பறிமுதல்



பள்ளிக்கரணை: பிப்-24 கொள்ளை சம்பவங்களில் ஈடுபட்டது தொடர்பாக அண்ணா பல்கலைக்கழக பாலியல் புகாரில் கைதான ஞானசேகரனிடம் இருந்து 100 பவுன் பறிமுதல் செய்யப்பட்டது. சென்னை அண்ணா பல்கலைக்கழக பாலியல் வழக்கில் கோட்டூர்புரத்தை சேர்ந்த ஞானசேகரன் என்பவர் கைது செய்யப்பட்டார். இந்த வழக்கை அண்ணா நகர் காவல் சிறப்பு புலனாய்வுக் குழு விசாரணை நடத்தி வருகிறது. இதில், கடந்த 2022-ம் ஆண்டு முதல் 24-ம் ஆண்டு வரை பள்ளிக்கரணை பகுதிகளில் உள்ள சொகுசு வீடுகளைக் குறி வைத்து காரில் வந்து திருடியதாக போலீஸாரிடம் ஞானசேகரன் வாக்குமூலம் அளித்திருந்தார்.

பள்ளிக்கரணை பகுதியில் நடந்த 7 திருட்டு வழக்குகளில் ஞானசேகரனுக்கு தொடர்பு இருப்பது தெரியவந்தது. இதில் கைது செய்யப்பட்ட ஞானசேகரனை 3 நாட்கள் காவலில் எடுத்து விசாரிக்க பள்ளிக்கரணை போலீஸாருக்கு ஆலந்தூர் நீதிமன்றம் உத்தரவிட்டது. பள்ளிக்கரணை துணை ஆணையர் கார்த்திகேயன் மேற்பார்வையில் சேலையூர் உதவி ஆணையர் கிறிஸ்டியன் ஜெயசில், ஆய்வாளர் தீபக்குமார் ஆகியோர் ஞானசேகரனிடம் விசாரணை நடத்தி வருகின்றனர். இதில் கடந்த 2019-ல் நீலாங்கரை, கானத்தூர் பகுதிகளில் வீடுகளில் திருடி சிறை சென்று வந்தது தெரியவந்தது. ‘குற்றச் செயல்களில் ஈடுபட மாட்டேன். திருந்தி வாழப்போகிறேன்’ எனக் கூறி, பிரியாணிக் கடை நடத்தி வந்ததும் விசாரணையில் தெரியவந்தது. போலீஸாரிடம் திருந்தி வாழப் போவதாக கூறி பிரியாணிக் கடை வைத்துக் கொண்டு, நள்ளிரவில் காரில் யாரும் இல்லாத சிசிடிவி கேமரா இல்லாத வீடுகளை நோட்டமிட்டு திருடி வந்ததாக போலீஸாரிடம் கூறியுள்ளார். மேலும் ஞானசேகரிடம் இருந்து சொகுசு கார், சுமார் 100 பவுன் நகைகளை போலீஸார் பறிமுதல் செய்து, விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் 7 திருட்டு வழக்குகளில் இன்னும் 150 பவுன் நகைகள் குறித்து விசாரிக்க மீண்டும் போலீஸ் காவல் கேட்கப்படும் என போலீஸார் தெரிவித்தனர்.

## கோவை நகைக்கடையில் போலி காசோலை கொடுத்து ரூ.12 லட்சம் மோசடி - 4 பேருக்கு வலைவீச்சு

கோவை: பிப்-24வ் கோவை நகைக்கடையில் போலி காசோலை வழங்கி ரூ.12 லட்சம் மோசடியில் ஈடுபட்ட சம்பவம் தொடர்பாக பெண்கள் உள்ளிட்ட நான்கு பேரை போலீஸார் தேடி வருகின்றனர். கோவை கிராஸ்கட் சாலையில் செயல்பட்டு வரும் தங்க நகை கடைக்கு தமிழகம் முழுவதும் கிளைகள் உள்ளன. கடைக்கு கடந்த சில நாட்களுக்கு முன் காரில் வந்த இரு பெண்கள் மற்றும் இரு ஆண்கள் கடை ஊழியர்களிடம் தொழிலதிபர்கள் என அறிமுகப்படுத்திக் கொண்டனர். பண்டிகைக்கு அன்பளிப்பாக வழங்க வைர நெக்லஸ் வேண்டும் என தெரிவித்தனர். ரூ.12 லட்சத்து 50 ஆயிரம் மதிப்புள்ள வைர நெக்லஸ் தேர்வு செய்து பெற்றுக் கொண்டனர். காசோலையை கடை ஊழியர்களிடம் கொடுத்தனர். தொழிலதிபர்கள் என, நம்பிய கடை ஊழியர்கள், காசோலையுடன், முகவரி மற்றும் தொடர்பு எண்களை பெற்று கொண்டனர். நான்கு பேரும் வைர நகையை எடுத்து சென்றனர். காசோலையை வங்கியில் செலுத்திய போது பணம் இல்லை என திரும்பி வந்து விட்டது. இதனால் அதிர்ச்சியான ஊழியர்கள் நகை வாங்கியவர்கள் வழங்கிய எண்ணில் தொடர்பு கொண்டனர். ‘சுவிட்ச் ஆப்’ செய்யப்பட்டிருந்தது. இதையடுத்து நகைக்கடை நிர்வாகம் சார்பில், காட்டூர் காவல் நிலையத்தில் நேற்று புகார் அளிக்கப்பட்டது. இதையடுத்து, இது தொடர்பாக வழக்குப்பதிவு செய்யப்பட்டு மோசடியில் ஈடுபட்ட நான்கு பேரை போலீசார் தேடி வருகின்றனர். போலி முகவரி கொடுத்து ஏமாற்றி சென்றது முதல்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. கடையில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கேமரா பதிவுகளை ஆய்வு செய்து போலீஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## சொந்த ஊரிலேயே சாதித்துக் காட்டினேன்! | வாழ்ந்து காட்டுவோம்



என் பெயர் பத்மா. நான் சேலம் மாவட்டம் ஆத்தூர் ஒன்றியம், தென்னங்குடி பாளையம் ஊராட்சியில் வசித்துவருகிறேன். 12ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். அதே ஊராட்சியில் பாக்குமட்டை தயாரிக்கும் தொழில்கூடத்தில் தினக் கூலியாகப் பணியாற்றிவந்தேன். இந்நிலையில் ‘வாழ்ந்து காட்டுவோம்’ திட்டத்தில் ‘மதி சிறகுகள்’ தொழில் மையம் குறித்து அறிந்தேன். அது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் இயங்கிவரும் ‘மதி சிறகுகள்’ தொழில் மையத்தை அணுகினேன். அங்குள்ள அலுவலர்கள் எனது வேலை தொடர்பான முன் அனுபவத்தைக் கேட்டறிந்தனர். ‘வாழ்ந்து காட்டுவோம்’ திட்டத்தின் கீழ் வழங்கப்படும் இணை மானியத் திட்ட நிதி குறித்து எடுத்துரைத்தனர். நான் மகாலட்சுமி மகளிர் சுயநிதிக் குழுவில் உறுப்பினராக உள்ளேன். குழு உறுப்பினர்களாக இருந்தால் அவர்களுக்கு 30 சதவீத மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் வழங்கப்படும் என்பதை அறிந்துகொண்டேன். அதைத் தொடர்ந்து ‘மதி சிறகுகள்’ தொழில் மையத்தின் மூலம் தொழிலுக்குத் தேவையான உதயம் சான்றிதழ், தொழில் திட்டம் ஆகியவை போடப்பட்டு பாக்குமட்டைத் தயாரிக்கும் இயந்திரம் வாங்குவதற்கு ஆத்தூர் இந்தியன் வங்கியின் மூலம் கடன் உதவியாக ரூபாய் 4 லட்சத்து 20 ஆயிரம் கிடைத்தது. இதில் 30% மானியமாக ரூபாய் ஒரு லட்சத்து 26 ஆயிரம் பெறப்பட்டது. கூலித் தொழிலுக்குச் சென்று வந்த நான் தற்போது எனது சொந்த ஊராட்சியிலேயே பெண் தொழில் முனைவோராக உயர்ந்து மாதம் 25 ஆயிரம் வரை லாபம் பெற்றுவருகிறேன். என் நிறுவனத்தில் இரண்டு பெண்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தந்துள்ளேன். இதனால் என் வாழ்வாதாரத்தோடு என் பகுதியைச் சார்ந்தவர்களின் வாழ்வாதாரமும் உயர்ந்துள்ளது என்பதை நன்றியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். திருப்பூர் மாவட்டம் அவிநாசி ஒன்றியம் அய்யம் பாளையம் ஊராட்சியில் 60 நபர்களைக் கொண்டு உழவர் உற்பத்தியாளர் குழு ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் குழுவிற்கு ‘வாழ்ந்து காட்டுவோம்’ திட்டத்தின் மூலம் ரூ.75,000 துவக்க நிதியாகப் பெறப்பட்டது. இந்த நிதியைப் பயன்படுத்தி கறவை மாடுகளுக்குப் புல் அறுக்கும் இயந்திரம் வாங்கப்பட்டு, இந்த இயந்திரங்களைத் தேவைப்படும் நபர்கள் சுழற்சி முறையில் எடுத்துச் சென்று பயன்பெற்று வருகின்றனர். மேலும், உழவர் உற்பத்தியாளர் குழுவில் இணையாத நபர்களுக்கும் மிகக் குறைந்த விலையில் வாடகைக்குக் கொடுத்து இதுவரை ரூ.15,000 ஈட்டப்பட்டுள்ளது. மேலும், இந்தக் குழுவில் உள்ள 30 நபர்களுக்கு நிலக்கடலை சமுதாயப் பண்ணைப் பள்ளி பயிற்சி நடத்தத் தொழில் திட்டம் தயாரித்து அனுப்பப்பட்டது. அதன் அடிப்படையில் நிலக்கடலை சமுதாயப் பண்ணைப் பள்ளி உற்பத்தியாளர்களுக்கு ரூ.64,000 நிதி பெறப்பட்டது. இந்த நிதியைப் பயன்படுத்தி சிறந்த முறையில் நிலக்கடலை சமுதாயப் பண்ணைப் பள்ளி 16 பயிற்சி வகுப்புகள் வழங்கப்பட்டன. இதன் மூலம் கடந்த ஆண்டு வரை மாட்டுத் தீவனத்திற்காக மட்டும் பயன்படுத்தப்பட்ட நிலக்கடலை தற்போது தீவனத்திற்குப் போக மீதமுள்ளவற்றைத் தானியங்களாகப் பிரித்தெடுத்து சில அலகுகளை விற்பனைக்காகவும் சில அலகுகளை அடுத்த பருவத்திற்கு விதைக்கவும் சேமித்து வைக்கின்றனர். இந்தப் பயிற்சியை வழங்கிய ‘வாழ்ந்து காட்டுவோம்’ திட்டத்திற்கும் மாவட்ட அலுவலகம் மற்றும் வட்டார அலுவலகத்திற்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். | இந்தத் திட்டம் குறித்த மேலதிக தகவல்களுக்கு: 1800 599 1600/155 330

## (கூலி)யில் நடிக்கிறேனா? - சந்தீப் கிஷன் மறுப்பு



‘கூலி’ படத்தில் நடிப்பதாக வெளியான செய்திக்கு சந்தீப் கிஷன் மறுப்பு தெரிவித்திருக்கிறார். சில தினங்களுக்கு முன்பாக, ‘கூலி’ படத்தில் கவுரவ கதாபாத்திரத்தில் சந்தீப் கிஷன் நடித்திருப்பதாக செய்திகள் வெளியாகின. இதனை உறுதி செய்யும் விதமாக ரஜினியுடன் இருக்கும் புகைப்படத்தையும் வெளியிட்டார் சந்தீப் கிஷன். இதனைத் தொடர்ந்து உண்மையாக இருக்கும் என பலரும் கருதினார்கள். தற்போது ‘கூலி’ படத்தில் நடிக்கவில்லை என்று தெரிவித்துள்ளார் சந்தீப் கிஷன்.


இது தொடர்பாக சந்தீப் கிஷன், “‘கூலி’ படத்தில் நடிக்கவில்லை. லோகேஷ் எனது நெருங்கிய நண்பர். நாங்கள் இருவரும் பெரிதாக பேசிக் கொள்வதில்லை என்றாலும் நல்ல நண்பர்களாகவே இருக்கிறோம். ‘கூலி’ படப்பிடிப்பு தளத்துக்கு சென்றிருந்தேன். ரஜினி சாரை சந்தித்து நீண்ட நேரம் பேசினேன். அப்போது எடுத்த புகைப்படத்தை வெளியிட்டவுடன் அனைவரும் அப்படத்தில் நடிப்பதாக செய்தி வெளியிட்டு விட்டார்கள். ரஜினி சாரை சந்தித்தது என் வாழ்வில் மறக்க முடியாத தருணம்” என்று கூறியிருக்கிறார்.

## இந்தியில் ரீமேக் ஆகிறது -சங்கிராந்திக்கி வஸ்துணம்



இந்தியில் ‘சங்கிராந்திக்கி வஸ்துணம்’ படத்தை ரீமேக் செய்ய பேச்சுவார்த்தை தொடங்கப்பட்டுள்ளது. தெலுங்கில் மாபெரும் வரவேற்பைப் பெற்ற படம் ‘சங்கிராந்திக்கி வஸ்துணம்’. இதனை இந்தியில் ரீமேக் செய்ய பேச்சுவார்த்தையை தொடங்கியிருக்கிறார் தயாரிப்பாளர் தில் ராஜு. இதில் வெங்கடேஷ் கதாபாத்திரத்தில் அக்‌ஷய் குமார் நடிக்கவிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. இதனை படக்குழுவினர் இன்னும் உறுதிப்படுத்தவில்லை. மார்ச் 1-ம் தேதி ஓடிடியில் வெளியாகும் ‘சங்கிராந்திக்கி வஸ்துணம்’, அதே நாளில் தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பாகிறது. இது தொடர்பான அறிவிப்பு வெளியாகியுள்ளது. இப்படம் உலகளவில் ரூ.300 கோடிக்கும் அதிகமாக வசூல் செய்துள்ளது. அனில் ரவிப்புடி இயக்கத்தில் வெளியான ‘சங்கிராந்திக்கி வஸ்துணம்’ படத்தில் வெங்கடேஷ், ஐஸ்வர்யா ராஜேஷ், மீனாட்சி சவுத்ரி உள்ளிட்ட பலர் நடித்திருந்தனர். முழுக்க காமெடிக்கு முக்கியத்துவம் கொடுத்து, ஆக்‌ஷனும் எமோஷனும் கலந்த திரைக்கதையுடன் வெளியாகி அமோக வரவேற்பைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

## 2015 முதல் நான் ஒருவேளை உணவுதான் சாப்பிடுகிறேன் - ஷமி ஓபன் டாக்



இந்திய அணியில் மீண்டும் நுழைவதற்காக 2015-ம் ஆண்டு முதலே தான் ஒரே ஒருவேளை மட்டுமே உணவு எடுத்துக்கொள்வதாக முகமது ஷமி தெரிவித்துள்ளார். சமீபத்தில் இந்திய அணி நியூஸிலாந்துக்கு எதிராக இந்தியாவிலும் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக அங்கும் டெஸ்ட் தோல்விகளைக் கண்டது பகுதியளவில் முகமது ஷமி இல்லாததால்தான். ஆனால், சாம்பியன்ஸ் டிராபி முதல் போட்டியில் 5 விக்கெட்டுகளை வீழ்த்தி பெரும் கர்ஜனையுடன் கிரிக்கெட் உலகைத் திரும்பிப் பார்க்க வைத்துள்ளார் இந்த வேகப்பந்து சிங்கம். இந்நிலையில், ஸ்டார் ஸ்போர்ட்ஸ் ஊடகத்தில் முன்னாள் வீரர் நவ்ஜோத் சிங் சித்து எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்த ஷமி, “5-6 கிலோ அல்ல, 9 கிலோ எடையைக் குறைத்துள்ளேன். பெரிய சவால் தான். நமக்கு நாமே சவால் ஏற்படுத்திக் கொள்வது மிகக் கடினம். தேசிய கிரிக்கெட் அகாடமியில் இருந்தபோது என் உடல் எடை கிட்டத்தட்ட 90 கிலோ இருந்தது. ஆரோக்கியமற்ற உணவை உண்பதற்கான ஆசை எனக்கு ஒருபோதும் இருந்ததில்லை. இனிப்புகள் சாப்பிட மாட்டேன். 2015 முதல் நான் ஒருவேளை மட்டுமே உணவு எடுத்துக் கொள்கிறேன்.

## விராட் கோலி ஃபார்மை மீட்டெடுக்க திணறுவது ஏன்? - இது அனில் கும்ப்ளே பார்வை





“விராட் கோலி கூடுதலாக முயற்சி எடுத்து ஆடுகிறார். எனவேதான் அவரால் ஃபார்மை மீட்டெடுக்க முடியவில்லை” என்று இந்திய முன்னாள் கேப்டனும், கோலியினால் வேண்டாம் என்று ஒதுக்கப்பட்ட முன்னாள் தலைமைப் பயிற்சியாளருமான அனில் கும்ப்ளே தெரிவித்துள்ளார். 2023 உலகக் கோப்பையில் அபாரமாக ஆடிய பிறகே விராட் கோலி 6 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் வெறும் 137 ரன்களையே எடுத்துள்ளார். இதில் ஒரே ஒரு அரைசதம் மட்டுமே. சமீபத்தில் வங்கதேசத்துக்கு எதிராக 38 பந்துகளில் வலி நிறைந்த 22 ரன்களை எடுத்து விட்டு ரிஷாத் ஹுசைன் என்ற லெக் ஸ்பின்னரின் ஃபுல் லெந்த் பந்தை பின் காலில் சென்று ஆடி லேட் கட்டில் பாயின்ட்டில் கேட்ச் கொடுத்து வெளியேறினார். விராட் கோலி கடந்த 6 இன்னிங்ஸ்களில் 6 முறையும் ஸ்பின்னரிடம் ஆட்டமிழந்துள்ளார். அதுவும் 5 முறை லெக் ஸ்பின்னரிடம். இந்நிலையில், கிரிக் இன்போ தளத்தில் பேசிய அனில் கும்ப்ளே கூறும்போது, “கடும் தாழ்வில் இருக்கிறார் விராட் கோலி. குறிப்பாக வெள்ளைப் பந்து கிரிக்கெட்டில் அவர் நினைத்த அளவுக்கு அவரால் நீண்ட காலம் சீரான முறையில் ஆட முடியவில்லை. அவர் கடுமையாக முயற்சி செய்கிறார் என்றுதான் எனக்குப்படுகிறது. அனைவரும் அவர்தான் ஆட்டத்தின் போக்கை மாற்றுபவர், அவர்தான் இந்திய அணியில் முக்கியமானவர் என்று பேசும்போது அவர் தன் மேலேயே அதிக அழுத்தத்தை ஏற்றிக் கொள்கிறார். இப்படியாக எல்லா அழுத்தங்களையும் தன்னகப்படுத்திக் கொள்கிறார். இதனால் ரிலாக்ஸ் ஆக ஆட முடிவதில்லை. தன்னுடைய சிறந்த இன்னிங்ஸைக் கூட அவரால் நினைத்துப் பார்த்து ஃபார்மை மீட்க முடியாமல் போகிறது. கூடுதலாக கடினமாக முயற்சி செய்கிறார், அவரது இன்னிங்ஸை பார்த்தாலே இது நமக்குப் புரிகிறது. ரோஹித் சர்மா சுதந்திரமாக ஆடுகிறார். ஏனெனில், பின்னால் நிறைய பேட்டிங் இருக்கிறது, அனைவரும் நல்ல பார்மில் இருக்கின்றனர்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd s treet, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA.V. Cell-94436 99066